ஸ்டெர்லைட் துப்பாக்கிச்சூடு சம்பவம்

# தேசிய மனித உரிமை ஆணையம் மீண்டும் விசாரிக்க கோரிக்கை

**மதுரை, மே 20:** ஸ்டெர்லைட் துப்பாக்கிச்சூடு வழக்கை தேசிய மனித உரிமை ஆணையம் மீண்டும் விசாரிக்க வேண்டும் என மக்கள் கண்காணிப்பகம் இயக்குநர் ஹென்றி திபேன் கூறினார்.

இது தொடர்பாக மதுரையில் அவர், திங்கள்கிழமை செய்தியாளர்களிடம் கூறியது: தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிரான போராட்டத்தில் துப்பாக்கிச் சூடு சம்பவம் நடைபெற்று ஓராண்டு நிறைவடைய உள்ளது.

இதில் பாதிக்கப்பட்ட மக்கள் தற்போது வரை பல்வேறு இன்னல்களைச் சந்தித்து வருகின்றனர். துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு தமிழக அரசு அறிவித்த உதவித் தொகை ரூ.20 லட்சம் முறையாக வழங்கப்படவில்லை. தமிழக அரசு உயிரிழந்தவர்களின் குடும்பத்தில் ஒருவருக்கு வேலை வழங்கியுள்ளது.

இந்த வேலை கல்வித் தகுதி அடிப்படையில் வழங்கப்படவில்லை. கல்வித் தகுதிக்கு ஏற்ப வேலை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழக அரசால் அமைக்கப்பட்டுள்ள நீதிபதி அருணா ஜெகதீசன் ஆணையம் சரிவர செயல்படவில்லை. ஓராண்டு கால விசாரணையில், ஆணையம் பட்டியலிட்ட 600 பேரில், 300 நபரிடம் மட்டுமே விசாரணை நடைபெற்றுள்ளது. இந்த நிலை நீடித்தால் விசாரணை முடிய 2 ஆண்டுகள் ஆகும். ஸ்டெர்லைட் வழக்கு சிபிஐ வசம் ஒப்படைக்கப்பட்டு 9 மாதங்கள் முடிந்தும் பெயரை குறிப்பிட்டு ஒரு வழக்கு கூடப் பதிவு செய்யப்படவில்லை.

தூத்துக்குடியில் தற்போது வரை சட்டம் ஒழுங்கு மோசமாக உள்ளது. பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் உள்ள வழக்கை எதிர்கொண்டுவரும்நிலையில், மாவட்ட நிர்வாகமும், காவல் துறையினரும் விதிமுறைகளை மீறி போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு சம்மன் அனுப்பி ஆஜராக சொல்லி நெருக்கடி அளித்து வருகின்றனர். இந்த விவகாரத்தில் பாதிக்கப்பட்டவர்கள் இன்று வரை நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றனர். ஆனால் தேசிய மனித உரிமை ஆணையம், பாதிக்கப்பட்டவர்களுக்கு தமிழக அரசு வழங்கிய வேலை, உதவித் தொகை, நீதிபதி அருணா ஜெகதீசன் ஆணையம் அமைப்பு, வழக்கு சிபிஐக்கு மாற்றம் ஆகியவற்றை காரணம் காட்டி விசாரணையை முடித்துக் கொண்டது வேதனையை அளிக்கிறது.

எனவே, பாதிக்கப்பட்டவர்களின் நிலையைக் கருத்தில் கொண்டு தேசிய மனித உரிமை ஆணையம் மீண்டும் புகார்களை விசாரிக்க வேண்டும். அவ்வாறு விசாரிக்கவில்லை என்றால் மக்கள் கண்காணிப்பகம் நீதிமன்றத்தில் வழக்கு தொடரும்.

ஸ்டெர்லைட் ஆலை மூடப்பட்டுள்ள நிலையிலும், அதன் நிர்வாகம் சமூக பொறுப்புகளுக்காக ஒதுக்க வேண்டிய நிதியினை, முறைகேடாக ஆலைக்கு ஆதரவான கருத்தினை உருவாக்க செலவு செய்து வருகிறது. இதனை மாவட்ட நிர்வாகம் தடுத்திட வேண்டும். தூத்துக்குடியில் சட்டம் ஒழுங்கு மற்றும் நிர்வாகம் சிறப்பாக செயல்பட வேண்டுமானால் ஆட்சியர் மற்றும் காவல் கண்காணிப்பாளர் ஆகிய இருவரையும் இடமாற்றம் செய்ய வேண்டும் என்றார்.

தினமணி Tue, 21 May 2019
https://epaper.dinamani.com/c/39584302